உ

சிவமயம்.

கன்னியாகுமரி

ஸ்தல புராணமும், வழிகாட்டியும்,

ஸ்ரீ கந்த புராணத்திலிருந்து
எடுத்து எழுதப்பட்டது.

சுசீந்திர ஸ்தல மஹிமைச் சுருக்கமும்

By

T. S. மணி,
ஜயலக்ஷ்மி ஸ்டோர்ஸ்,
சன்னதித் தெரு,
கன்னியாகுமரி.

காப்பிறைட்.
(R. Dis. 1046-40 P. R.)

விலை 37 ந.பை.

கன்னியாகுமரியின் அதிசயக் காட்சி.

கன்னியாகுமரியில் சித்திரா பௌர்ணமியன்று சூரிய னுடைய அஸ்தமனமும், சந்திரனுடைய உதயமும் ஒரே சமயத்தில் காணலாம். இரண்டு பக்கமுள்ள சமுத்திரத் திலும் (கிழக்கு வங்காளக்குடாக்கடலிலும், மேற்கு அரபிக் கடலிலும்) இதைக் காண கண்கொளாக் காட்சியாகும். இம்மாதிரி காட்சியை வேறு ஒரு இடத்திலும் காணமுடி யாது. இதைக் காண லெட்சக்கணக்கான மக்கள் அன்று இங்கு கூடுவார்கள். இங்கு மூன்று பக்கமும் சமுத்திரத் தால் சூழப்பட்டதால் இந்த விசேஷத்தைப் பார்க்கமுடியும்.

கோவில் பூஜா நேரம்.

T. 6478.

காலே 4 மணி முதல் 12 வரை.
இரவு 5 மணி முதல் 9 வரை.

51.33506
1982

கோவில் வழிபாடு விபரங்கள்.

சர்க்கரை பொங்கல் பால் பாயஸம் பருப்பு பொங்கல்	காலே 4 மணி முதல் உச்சிகால பூஜை முடிவு வரை.

அபிஷேகம்.

முழுக்காப்பு—சந்தண அலங்காரம், ஆபரண அலங் காரம் முதலியன.

இரவு: வடை, அப்பம், கன்னிகா போஜனம்.

926.38.64
D06

கன்னியாகுமரியின் வழிகாட்டி

தாமசிக்கும் இடங்கள்

1. சத்திரம்.
2. தேவஸ்தானம் சத்திரம் (வாடகையுடன்)
3. கேப் ஹோட்டல். ,,
4. றெஸ்ட் ஹவுஸ். ,,
5. மீனுக்ஷி பவனம் ,,

பார்க்கவேண்டிய விசேஷங்கள்

1. சூரிய உதயம் (வங்காளகுடாக் கடல்)
2. சூரிய அஸ்தமனம் (அரபிக் கடலில்)
3. குமரி அம்மன் ஆலயம்.

வைகாசித் திருவிழா, நவராத்திரி, ஆடி மாசத்து

அமாவாசை, தை மாசத்து அமாவாசை, சித்திரா பௌர்ணமி, திருகார்த்திகை, ஆடிகளபாபிஷேகம்.

4. ஸ்வாமி விவேகானந்தா நூல் நிலையம்.
5. காந்திஸ்மாரக மந்திர்.

பஸ் வசதிகள்.

காலையிலும் மாலையிலும் எக்ஸ்பிரஸ் பஸ் தவிர முக்கால் மணி நேரத்துக்கு இங்கிருந்து நாகர்கோவிலுக்கும், திருவனந்தபுரத்துக்கும் கிடைக்கும்.

கன்னியாகுமரி—திருநெல்வேலிக்கு காலை 7·30-க்கும் மாலை 4 மணிக்கும் நேராக 2 பஸ்கள் உண்டு. வள்ளியூருக்கு ஷெட்டில் பஸ்களும் உண்டு.

இங்கிருந்து பாபநாசம் காலை 6 மணிக்கும், பிற்பகல் 1·30 மணிக்கும் உண்டு.

கோவில் உத்ஸவங்கள்.

வைகாசி மாதத்திலும், புரட்டாசி மாதத்திலும் அம்மனுக்கு இரண்டு உத்ஸவங்கள் உண்டு. இரண்டும் பத்து நாட்கள் நடக்கும். கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை, ஆடி அமாவாசை, தை அமாவாசை, சித்திரா பௌர்ணமி முதலிய நாட்கள் அம்மனுக்கு விசேஷ நாட்களாகும்.

குமரிஅம்மன் கோவிலிலுள்ள கிழக்கு நடை எப்போதுமே சார்த்தியிருக்கும். ஒரு வருஷத்தில் ஐந்து நாட்கள் திறப்பதுண்டு. வைகாசி மாதத்தில் விசாக நாளன்றும், புரட்டாசி மாதத்தில் விஜயதசமி நாளன்றும், திருக்கார்த்திகை அன்றும், ஆடி அமாவாசை, தை அமாவாசையன்றும் திறப்பார்கள். அதாவது அம்மன் (உத்ஸவ அம்மன்) வாகனத்தில் எழுந்தருளி தெரு வீதிகளில் உலாவிவிட்டு திரும்பும் சமயம் கிழக்கே நடையிலிருக்கும் கன்னிகா தீர்த்தத்தில் ஆருட்டு நடக்கும். நடந்ததும் கிழக்கே நடையோடு உள்ளே எடுத்துச் செல்வார்கள். வைகாசி மாதம் 10 நாட்கள் உத்ஸவம் வெள்ளி, மரம் இவைகளில்

செய்திருக்கும் வாகனங்களில் அம்பாளின் உத்ஸவ விக்ரகத்தை வைத்து புஷ்பங்களினால் அலங்கரித்து மேளதாளத்துடன் தெருக்களில் உலாவவரும். ஒன்பதாவது நாள் காலை ரதோற்ஸவமும் 10-வது நாள் தெப்போற்ஸவமும் உண்டு. எல்லா வைகாசி மாதத்திலும் விசாக நட்சத்திரத்தன்றுதான் உத்ஸவம் கடைசி நாள்.

புரட்டாசி மாதத்திய உத்ஸவம் பத்து நாட்களில் ஒன்பது நாட்கள் கோவிலுக்குள் நவராத்திரி மண்டபத்தில் கொலுவைப்பார்கள். இரவு வெள்ளியினால் செய்திருக்கும் வாகனங்களில் கொலு வைத்திருக்கும் உத்ஸவ அம்மனை எழுந்தருளச்செய்து அலங்கரித்து கோவிலுக்குள் வெளிப் பிரகாரத்தில் மூன்று பிரதக்ஷணங்கள் சுற்றி வரும். பத்தாவது நாள் விஜயதசமியன்று தேவியை வெள்ளிக்குதிரை வாகனத்தில் வைத்து அலங்கரித்து மாலை 3 மணிக்கு இங்கிருந்து எழுந்தருளச்செய்து மகாதானபுரம் என்ற ஊருக்கு (3 மைலிலுள்ளது) போகும். போய் அம்மன் வேட்டையாடிவிட்டு திரும்பவருவார்கள். இந்த இரண்டு உத்ஸவங்களும் அம்மனுக்கு விசேஷ நாட்களாகக் கருதப்படும்.

குமரி அம்மன் ஆலயமும் வழிபாடும்

கன்னியாகுமாரி இந்தியாவிலுள்ள புண்யக்ஷேத்திரங்களில் முக்கியமான ஒன்று. இங்கு வங்காளக்குடாக்கடல் கிழக்கும், இந்து மகாசமுத்திரம் தெற்கும், அரபிக்கடல் மேற்கும் மூன்றுபக்கத்தில் சூழப்பட்டு நடுவில் பெரிய மதில்களால் சூழப்பட்டிருக்கிறது. கோவிலுக்குள் வடக்கே நடையிலிருந்து போனால் முதலில் காலபைரவர் தரிசனம். பின் இடது கை வழியாக பிரகாரம் போனால் முதலில் பாதாள கங்கை என்ற கிணறு. இதில் இருந்துதான் அம்பாளுக்கு நைவேத்தியத்துக்கும், அபிஷேகத்திற்கும் ஜலம் எடுப்பது. பூமியின் அடியில் வழிசெய்து 32 படிகள் கட்டியிருக்கிறார்கள். அத்துடன்தொடர்ந்துஇடப்பக்கமாகப்போனால்கிழக்கே சன்னதி கொடிமரம். அத்துடன் கோவிலுக்குள் போகலாம். முதலில் தேவி தெரிசனம் கழிந்து இடப்பக்கமாகப்

போனல் உள்பிரதக்ஷணம். அதில் தென்மேற்கு மூலையில் இந்திரனல் பிரதிஷ்டைசெய்த இந்திரகாந்த விநாயகர். பின் பிரதக்ஷணமாக சன்னதிக்கு வந்தால் வடபக்கத்தில் தேவி யின் தோழியாகிய தியாகசௌந்தரி அம்மனும் காணலாம். பின் சன்னதிக்கு வந்தால் நிலைக்கண்ணடி தரிசனம். பின் கொடிமரத்துபிரதக்ஷணமாக சீவிலி மண்டபம் பிரதக்ஷணம் வந்தால் வடக்கு மூலையில் அம்மனின் இரண்டாவது தோழியாகிய பாலசௌந்தரி அம்மனும் கல்வார்ப்பும் காண லாம். அத்துடன் வெளியில் வந்தால் இடப்பக்கம் அம் மனின் கொலுமண்டபம். அது கழிந்து வெளிச்சுற்றுப்பிர காரம் சுற்றினல் மேற்கு பக்கம் நவராத்திரி மண்டபம் பார்க்கலாம். அத்துடன் கோவிலுக்கு வெளியில் வரலாம். குமரி அம்மனுக்கும் இந்திரகாந்த விநாயகருக்கும் அபி ஷேகங்கள், அர்ச்சனைகள், நைவேத்தியங்கள் முதலிய வழிபாடுகளும் செய்யலாம். காலை 6–30 மணிக்கும், உச்சிகாலம் 11–30 மணிக்கும் மாலை 6–30, 8–30, 8–45க்கு மாக ஐந்துகாலம் தீபாராதனைகள் உண்டு.

கிழக்கு வாசல் எப்போதும் சாத்தியிருப்பதின் காரணம்

கொஞ்சகாலத்திற்கு முன்னல் அந்தநடை திறந்திருந்த தாகவும் அப்படி அந்தநடை திறந்திருந்ததால் குமரி அம் மனை சமுத்திரத்திலிருந்தே பார்க்கமுடியும். இப்படி இருக்க ஒருநாள் இரவு ஒரு ஸ்டீமர் அவ்வழியாக வடக்கிலிருந்து தெற்குபக்கமாகப் போனதாகவும் அப்போது அம்மனுக்கு வைத்திருந்த நாகரத்தினத்தின் ஒளியை கப்பித்தான் லைட் ஹவுஸ் ஆக நினைத்து மேற்குபக்கத்தின் வழிவந்ததாகவும் இங்குள்ள பாறையில் அந்த கப்பல் அடிபட்டு மூழ்கிப்போன தாகவும், அன்றுமுதல் அந்தகதவு சாத்தினதாகவும் சொல் லப்படுகிறது.பழைய காலத்து அந்த வழக்கத்தை இன்றும் கையாளுகிருர்கள்.

அந்த நாகரத்தினத்தை அம்பாளுக்கு எடுத்துக் கொடுத்ததுஇங்கிருந்து 4-வது மைலிலிருக்கும் அகஸ்தீஸ் வரம் என்ற ஊரில் நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு

வராகும். அவர் தினமும் காலையிலும், மாலையிலும் பதனி இறக்குவதற்காக பனைமரம் ஏறும் வழக்கம். ஒரு நாள் மாலை அவர் தோப்பிலுள்ள பனைமரங்களில் ஏறி பதனி இறக்கும்போது இருட்டிவிட்டது. ஒன்றிரண்டு பனைகள் பாக்கியிருந்ததால் அதிலும் ஏறிவிடுவோம் என்ற எண்ணத்துடன் ஒரு பனை மேல் ஏறியிருக்கும்போது அதன் கீழே ஒரு நாகமானது தன் வாயிலிருந்து ரத்தினத்தை உமிழ்ந்து வைத்துவிட்டு இரைதேடப்போயிற்று. நாடாரானவர் கீழே இறங்கிவந்து பார்த்து அதனுடைய பிரகாசத்தில் மயங்கி கொஞ்சம் சாணம் எடுத்து அதன்மேல் போட்டுவிட்டு அதே மரத்தின்மேல் ஏறியிருந்துகொண்டார். நாகமானது திரும்பவந்து பார்க்குமிடத்தில் ரத்தினத்தைக் காணுமல் மனிதவாடை அறிந்து மரத்தின்மேல் ஏறி உச்சியை அடைந்தது. நாடார் கொஞ்சமும் அஞ்சாமல் தன் கையிலிருந்த வெட்டுக்கத்தியால் அந்த நாகத்தை இரண்டாக வெட்டிவீழ்த்திவிட்டு கீழே இறங்கிவந்து ரத்தினத்தை எடுத்து அதனுடைய பிரகாசத்தையும், பருமனையும் கண்டு அந்த காலத்தில் ராஜதானியாக இருந்த பத்மனுபபுரம் என்ற இடத்தில் (25 மைலில்) மகாராஜாவிடம் கொண்டு போய் கொடுத்தார். அந்த ரத்தினத்தின் விலை மதிக்க முடியாததால் அந்த அரசரும் நாடார் குடும்பத்துக்கு நிறைய நிலபுலங்களையும் கொடுத்து, என் காலத்தில் நீ இதைஎடுத்துத்தந்ததால் நாகமணி மார்த்தாண்டன் என்ற பெயரையும் கொடுத்தார். பின் இங்கிருந்து அந்த வைரம் கிடைத்ததால் அதை இங்கேயே அம்மனுக்கு காணிக்கையாக வைத்துவிட்டார்.

பூஜா சமயங்கள்.

அதிகாலை:– 4.30-க்கு விஸ்வரூப தரிசனம்.
5-க்கு அபிஷேகம்.
6.30-க்கு காலசந்தி தீபாராதனை (உஷாபூஜா)
8-க்கு பந்தீரடி பூஜை.
9-க்கு நவகம்பூஜை அபிஷேகத்திற்குரிய ஜலம் ஒன்பது குடங்களில் நிறைத்து பூஜை செய்தல்.

10-க்கு உச்சிகால அபிஷேகம்.
11.30-க்கு உச்சிகால பூஜை.

மாலே:- 5.30-க்கு அலங்கார தரிசனம்.
6.30-க்கு சாயரக்ஷை தீபாராதனே.
8.30-க்கு அர்த்தஜாம பூஜை.
9-க்கு ஏகாந்த தீபாராதனே.

தேவஸ்தானத்திலிருந்து தெரிசனத்துக்கு வரும் ஜனங்களுக்கு தாமசிக்க சௌகரியமான கெட்டிடங்களும் உண்டு.

முகமதிய அரசர் திருவிதாங்கூர் ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்தபோது சுசீந்திரத்திலுள்ள விக்கிரகங்களே எல்லாம் உடைத்துவிட்டு நேராக இங்கே வந்தார். அவருக்கு கோவிலுக்குள் போகவேண்டும் என்ற ஆசையினுல் இருக்க இங்குள்ள அதிகாரிகள் தாங்களுக்கு நாங்கள் அம்மனே இங்கே கொண்டுவந்து காட்டுகிருேம் என்று ஓர் சிலேயை அம்மனுக அலங்காரம் செய்துகொண்டு காட்டினுர்களாம். அச்சிலே இன்றும் தியாகசவுந்தரி அம்மன் சன்னதியில் வெளியில் வடபக்கம் வைத்திருக்கிறதையும் பார்க்கலாம்.



கன்னியாகுமரி ஸ்தலபுராணம்.

விநாயகர் ஸ்துதி.

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பலஸார பக்ஷிதம்
உமாசுதம் சோகவிநாச காரணம்
நமாமே விக்நேஸ்வரபாத பங்கஜம்.

குமரி அம்மன் ஸ்துதி.

1. கன்னியென்றொரு பேர்கொண்டு கருணையே வடிவமாகி
மின்னிய மின்போல் சோதிவிளக்கொளி மேனிமீதில்
நன்னிற கமலம்போல நளிமுகம் நயனசெங்கை
தன்னிறம் சரணம்கொண்டாள் சரணமேசரணமம்மா.

2. மருமலர்மாலை யோர்கை ஓர்கைவான்துடையுமாக
இருகையும் அமைத்து முக்கண்இறைவனைநோக்கி நான்காம்
அருமறை இயற்றும்தேவி ஐம்புலனடக்கி
நல்லாருரியவர் எழுவர்சூழ ஓங்குமொன்தவம்செய்கின்றாள்.

3. உலகெலாம் நிறைந்துநின்று ஓங்கொளிசத்திவையத்
தலகில் உயிர்களெய்தும் அருந்துயரகற்றவேண்டி
நிலை அருளுருவம் கொண்டு நெடுங்கடல்குமரிஎன்னும்
தலமிசை தவம்செய்வாள்போல் சமைந்தவள்சரணம்போற்றி.

அத்தியாயம் 1

குமரி என்னும் பெயரின் வரலாறு

கன்னி அன்னை திருக்கோயில்கொண்டு எழுந்தருளும் இத்தலம் 25 புண்ணியப்புனல்கள் உடைத்தாகி ஆதிசேது என்ற திருப்பெயராலும் வழங்கப்படும். எல்லை நீத்த உல கின் எல்லையில் நீண்டு பரந்த "இலமோரியாக்" கண்டத்தை உண்டு சுவைத்த இக்குண்டுக் கடலைக்காணும் போதெல் லாம் வெகுண்டு கட்டுப்படுத்தியும், அடியார் இன்முகம் காண அருள் சுரந்தும் சீலத்தவம் செய்கின்ற கோலக் குமரித்தாயின் திருவடிகள் தோய்த்த திருத்தலமே இது வென்றால் இதன் பெருமை விளக்கற்பாலதோ! இச்சரித்தி ரம் ஸ்காந்தபுராணத்தில் உபரி பாகத்தில் தானவைபோக காண்டத்தில் உள்ளது.

இத்தலம் குமரி என்றழைக்கப்படுவதற்கு காரணம் பதினெண் புராணங்களில் ஒன்றாகிய காந்த புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்புவியின்கண் விளங்குகின்ற ஓர் அண்டத்தின் உயர்ச்சியும் விசாலமும் ஐம்பதுகோடி யோசனை தூரம். இவ்வண்டத்தின்கீழ் ஏழுலகமும் உள்ளன. அவ்வுலகங் கள் அண்டபித்திகைவரைக்கும் ஐம்பதுகோடி யோசனை தூரம். இத்தகைய பூமிக்கு மத்தியிலே மஹாமேரு மலை யிருக்கிறது. அந்த இடம் பூமியில் இருந்து ஐம்பதுகோடி யோசனை தூரத்தில் இருக்கிறது. அம்மலையின்மேல் ஒவ் வொன்றும் இருபத்தையாயிரம் யோசனை தூரம் கொண்ட மூன்று தட்டுகள் உண்டு கீழ்த்தட்டின் விரிவு பதினையாயி ரம் யோசனை தூரம். நடுத்தட்டின் விரிவு பதினாயிரம் யோசனைதூரம். இவ்விரு தட்டுகளிலும் சித்தர், சிங்கர், தேவர் வசிப்பவர்கள். மேற்தட்டு பதினெண்ணாயிரம் யோசனைதூர விரிவுள்ளது. அத்தட்டின் பெயர் சக்கர வாடம். அதன் எட்டு திசைகளிலும் எட்டு கொடுமுடி கள் உள்ளன. அமராபதி என்று அழைக்கப்பட்ட கீழ்த் திசையில் இந்திரனும் தேசோபதி என்று அழைக்கப்பட்ட

அக்கினி திசையில் அக்கினியும்,யமுனி என்ற தென்திசையில் எமனும், கைத்தியபதி என்ற கன்னி திசையில் நிருதியும், சுத்தபதி என்ற மேற்கு திசையில் வருணனும், கந்தபதி என்ற வடமேற்கு திசையில் வாயுவும், மஹோதயம் என்ற வடதிசையில் சந்திரனும், ரஸாபதி என்ற வடகிழக்கு திசையில் ஈசானனும், அவரவர் பரிவாரங்களுடன் வீற்றிருப்பார்கள். பிரம்ம தேவர் இவ்வெட்டு திசைகளுக்கும் நடுவில், எழாயிரம் யோசனை தூரமுள்ள மனோவதி என்ற பட்டணத்தில் இருப்பர்.

மனோவதிக்கு வடக்கில் இருக்கும் சோதிளக்கம் என்ற கொடுமுடியில் விநாயகர், கந்தர், நந்தி, மாகாளர், மஹேஸ்வரர் இருப்பார்கள். இத்தகைய மேருமலைக்கு தென்பாகத்தில் நிடதம், எமகூடம், இமகிரி என்ற மூன்று மலைகள் உண்டு. அவற்றின் ஒவ்வொன்றின் உயரமும் பதினாயிரம் யோசனை. வடபக்கத்தில் நீல மலையும், கிருங்க மலையும் உள்ளன. ஒவ்வொன்றும் பதினாயிரம் யோசனை தூரம். கீழ்ப்பக்கத்திலே மலியவான் என்ற மலையும்,மேல்பக்கத்தில் கந்தமான் மலையும் ஒவ்வொன்றும் பதினாயிரம் யோசனை தூரம் உள்ளன. மலியவானுக்கு மேற்கும், கந்தமானுக்கு கிழக்கும், நீல மலைக்கு தெற்கும், நிடத மலைக்கு வடக்குமுள்ள பூமியே இளாவிருதகண்டம் எனப்படும். அதிலே நாற்றிசைகளிலும் நான்கு மலைகள் மேருமலைக்கு அடைக்கல்லாக நிற்கும். கீழ்பக்கத்திலேயுள்ள வெண்மை மந்திர மலையிலே கடம்பவிருக்ஷம் ஒன்று ஆயிரயோசனைதூர உயரம் உள்ளது. அம்மலையின்கிழே வருணோதக தீர்த்தமும், சயித்திராதவனமும் உள்ளன.தென்பக்கத்திலே கந்தமான் மலையிலே ஆயிரயோசனைதூரம் உயர்ந்த நாவல்மரம் உள்ளது. அம்மரத்தின் பழச்சாறு சொற்ண நதியாகி மேரு மலையைச் சுற்றிசெல்லுகிறது. அம்மலையின் நடுவிலே மானதசரஸு தடாகமும், மானத வனமும் உள்ளன. மேல்பக்கத்திலே நீலமலையின்மேலே ஆயிரயோசனைதூரம் உயர்ந்த அரசவிருக்ஷம் அம்மலையின் நடுவிலே சீதோத வாவியும், வைப்பிராச நந்தவனமும் உள்ளன. வடபக்கத்

திலே சுபாரிசுவ மலையின்மேலே ஆயிரம் யோசனை தூரம் உயர்ந்த ஆல விருக்ஷமும், அம்மலையின் அடியிலே பத்தி ரக தடாகமும் குளிர் என்ற சோலையும் உண்டு.

இந்த இளாவிருத கண்டத்திலே தங்கியிருப்பவர்க ளுக்கு ஆயுள்நாள் பதிமூவாயிரம் வருடங்களாகும். அவர் பொன்னிறமுடையவர். நாவல் பழச்சாறு அவர் உணவு. இந்தச் சாருகிய சாம்ப நதி ஓடுவதால் இந்த நடுத்தீவிற்கு நாவல் தீவு என்று பெயர். மாலுயவானுக்கு கிழக்கும், கீழ்கடலுக்கு மேற்கும் உள்ள பூமி பத்திராசுப கண்டம் எனப்படும். அதில் இருப்பவருக்கு ஆயுள் நாற்பதினயிரம் வருடங்கள். அவர்கள் சந்திரோதயம் போன்ற நிறம் உடையவர். அவர் உணவு நீலோற்பமலர். கந்தமானத்தின் மேற்கும் மேல்கடலுக்கு கிழக்கும் உள்ள பூமி சேதுமால கண்டம் எனப்படும். அதில் இருப்பவர் வாழ்நாள் பதினு யிரம் வருடங்கள். அவர் நீலோற்பல நிறமுடையவர். பலாக் கனியே அவர் உணவு. நீலமலைக்கு வடக்கும் சுபேத கிரிக்கு தெற்குமுள்ள பூமி இரமிய கண்டம் எனப்படும். அதில் இருப்பவர்கள் வாழ்நாள் பன்னீராயிரம் வருடங்கள். அவர் நீலோற்பல நிறமுடையவர். ஆலம் பழம் புசிப்பவர். சுபேதகிரிக்கு வடக்கும் சிருங்கவரைக்கு தெற்குமுள்ள பூமி இரணிய கண்டம் எனப்படும். அதில் இருப்பவர்கள் வாழ் நாள் பன்னீராயிரம் வருடங்கள். அவர் சந்திரன் போன்ற நிறமுடையவர். எலுமிச்சம் பழச்சாறு அவர் உணவாகும். சிருங்கவரைக்கு வடக்கும் வட கடலுக்கு தெற்குமுள்ள பூமி குரு கண்டமெனப்படும். அதிலிருப்பவர் வாழ்நாள் மூவாயிரம் வருடங்கள். அவர் பச்சை நிறம் உடையவர். பிரியமான கனிகள் புசிப்பவர். மேரு மலைக்கு தென்பக்கத் திலே நிடதகிரிக்கு தெற்கும் எமகூடமலைக்கு வடக்கு முள்ள பூமி அரி கண்டம் எனப்படும். அதில் இருப்பவர் வாழ் நாள் பன்னீராயிரம் வருடங்கள். அவர் நிறம் வெண்மை. உணவு கருப்பஞ்சாறு. அவருக்கெப்போதும் புருவங்களின் வேற்றுமையில்லை. எமகூடம் மலைக்கும் இம்யமலைக்கும் இடையில் உள்ள பூமி குரு கண்டமெனப்படும். அதில்

இருப்பவர் வாழ்நாள் பதினுயிரம் வருடங்கள். அவர் பொன்னிறம் உடையவர். அத்திப் பழம் புசிப்பவர். இந்த எட்டு திசைகளிலும் எட்டு கண்டத்திலும்இருப்பவர்களுக்கு நரை, திரை, மூப்புகள் இல்லை. நான்கு யுகத்திலும் அவர்களுக்கு அறிவுப் பலமும் குறையமாட்டா. இமய மலைக்கு தெற்கும் தென்கடலுக்கு வடக்குமுள்ள பூமி பரதகண்டமெனப்படும். அவர்கள் அன்னமாதிகள் புசிப்பவர்கள்.அவர் வாழ்நாள் நூறு வருடங்கள். புண்ணிய பாவங்கள் பலன்களை அனுபவிப்பவர். இந்த பூமியே சம்புத் தீவு.

மேற்கூறிய தீவினுள் நடுத்தீவாகிய நாவல் தீவில் இருந்து அரசுபுரிந்த ஆக்கிநேந்திரனுக்கு ஒன்பது புத்திரர் களிருந்தனர். அவ் ஒன்பதின்மருக்கும் அரசன் ஒன்பது தீவுகளையும் தனித்தனி ஒவ்வொன்ருக கொடுத்து காக்கும் படிச்செய்தான். தென்பக்கத்திலே பரதகண்டத்தை பரதன் என்பவன் ஆண்டுவந்தான். அவனுக்கு இந்திரன், சுசேரு தம்பிரபருணன், கபத்திமாநாகன், சந்திரன், கந்தருவன், வருணன் என்ற எட்டு புத்திரர்களும் குமரி என்ற ஒரு புத்திரியுமுண்டாயினர். பரதனுகிய அரசன் பரத கண் டத்தை ஒன்பது பாகம் ஆக்கி ஒன்பது பேருக்கும் தனித் தனி கொடுத்து ஆண்டுவரும்படி செய்தான். அவைகளுள் தென்பாகத்தை குமரிஎன்பவள் ஆண்டுவந்தாள்.ஆதலால் அத்தலத்துக்கு குமரி என்ற பெயர் வந்தது. அத்தலத் திலே உலகமாதாவின் அம்சமாகிய கன்னிநாயகிபுட்பகாசி தவம் செய்திருந்தாள் என்ருல் அதன் பெருமையை யாவர் சொல்ல வல்லவர்.

அத்தியாயம் 2

கைலாசச் சுருக்கம்

திசைகள் எல்லாம் துதிக்கும் கைலாசமலை, மலைகளுக் கெல்லாம் உயர்ந்தது. வெள்ளிமலை என்னும் பெயர் உள்

ளது சிவபெருமான் எழுந்தருளியிருக்கப்பெற்றது, சித்தர், முனிவர், யோகிகள், யுகாந்த காலத்திலும் அழியாத நித்தியர், கணங்களோடு நிறைந்திருக்கப்பெற்றது. நாலு திசையிலும் வேதமுழக்கத்தாலும் நிறைந்திருக்கப்பட்டது. அந்த கைலாய மலையின் உச்சியிலே கோவில் ஒன்று உள்ளது. அக்கோவில் சந்திரகாந்த கற்களாலும், நவரத்தினங்களாலும், பொன்னினுலும் தேவதச்சனுல் செய்யப்பட்டது. அதிலே ஆனந்த நர்த்தனம் செய்து தேவர் முனிவர்களுக்கு கருணைசெய்து அனுப்பிவிட்டு சிவபெருமான் உமாதேவியாருடன் எழுந்தருளியிருக்கும்போது மஹிஷா சூர சம்கார தேவியானவள் கன்னிப் பருவமடைந்து, அக்கினி குண்டத்தில் முழுகி எழுந்திருந்து வணங்கி நின்ருள்.

அவ்வமயம் புட்பகாசி என்ற திருநாமம் உமாதேவியால் பெற்ருள். புட்பகாசி ஆனந்தக் கண்ணீர் திருமஞ்சனமாகவும், புன்சிரிப்பே புஷ்பமாகவும், சுவாசமே வாசனைத் திரவியமாகவும், சரீரத்தில் உண்டாகும் வாசனையே நல்ல தூபமாகவும், நாக்கிலுண்டாகும் வசனமே நைவேத்தியமாகவும், நேத்திரப் பார்வையே தீபமாகவும், கன்னத்திலே அடிப்பதையே வாத்திய ஓசையாகவும் அமைத்து சாரூப்பிய மோக்ஷம் அடைவதற்காகவும் பகவானேடு ஐக்கியமாவதற்காகவும் தவம் செய்யலாயினள்.

இவ்வாறு மூன்று யுகம் பூஜைபுரிவதைக்கண்டு திருவுளம் மகிழ்ந்து ஈஸ்வரன் புட்பகாசியாகிய கன்னியை நோக்கி உனக்கு வேண்டிய வரம் கொள்க என்றருளிச் செய்தலும், புட்பகாசி மகிழ்ந்து வணங்கி சருவசங்கார காலத்தில் உம்மோடு கிரீடைசெய்து மகிழ்ந்து இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்க சிவபெருமானும் புட்பகாசியை நோக்கி அருளிசெய்வார். முன்னூற்றி அறுபத்தைந்து நாளும், பதினைந்து கலையும், முப்பத்திமூன்று விகலையும், பதினைந்து கற்பரையும் சேர ஒரு வருடமாம். அவ்வருடம் நான்கு லட்சத்து முப்பத்தீராயிரம் சேர கலியுகம் முடிவாகும். அக்கலியுகம் இரட்டித்தால் துவாபர

யுகமாகும். அது இரட்டித்தால் திரேதாயுகம் ஆகும். அது இரட்டித்தால் கிரேதாயுகம் ஆகும். அது இரட்டித்தால் ஓர் சதுர்யுகமாகும். அந்த சதுர்யுகம் இரண்டாயிரம் ஆனால் பிரம்மாவுக்கு ஒரு தினம் ஆகும். அத்தினம் முப்பது ஒரு மாதம். அம்மாதம் பன்னிரெண்டு ஒரு வருடம். அவ்வருடம் நூறு ஆனால் பிரம்ம பிரளயம் உண்டாகும். அப்பிரளயம் பத்து நடந்தால் விஷ்ணுவுக்கு ஒரு நாளிகை. அவ் விஷ்ணு பன்னிரெண்டுபேர் இறந்தால் ருத்திரனுக்கு ஒரு க்ஷணகாலம். அப்போது சருவ சங்காரம் உண்டாகும். அந்தக்காலம் உன்னோடு மகிழ்ந்து இருப்போம். அதுவரையிலும் தென்சமுத்திரக்கரையில் சப்த மாதர்கள் தோழிகளாயிருக்க இலுப்பைப்பூ மாலை தாங்கி இடக்கையை துடையிலே வைத்து தவம்செய்துகொண்டு இருக்கவேண்டும். நீ இருக்கும் இடம் கன்னிகா க்ஷேத்திரம் எனவும், தவத்தலம் எனவும் சொல்லுவர். ஞானவனம் என்னும் அத்தலத்திலே நாமும் பிரம்மச்சாரியாய் வந்திருப்போம் என்று விடை கொடுத்தருளினர். அவ்விடைபெற்று புட்பகாசி சிவபிரானையும், உமாதேவியையும் வணங்கி சப்த கன்னியர்களுடன் போதிய மலையைச் சார்ந்து அங்கு வசித்துவரும் அகத்தியமாமுனிவருடைய ஆசிரமத்தில் சிலநாள் வாழ்ந்துவந்தாள். அத்தலம் இங்கிருந்து மூன்ருவது மைலிலிருக்கும் அகஸ்தீஸ்வரம் என்று அழைப்பார்கள். மீண்டும் தென் சமுத்திரக்கரை வந்துசேர்ந்து இங்குள்ள சமுத்திரத்தின் அழகையும், அலைகளின் ஓசையும், தென்றலின் இனிமையும் சேர, சமுத்திரக்கரையிலுள்ள பூஞ்சோலை ஒன்றில் புகுந்து இதுவே புண்ணிய ஸ்தலம் என்று நினைத்து சிவபிரான் கட்டளையிட்டருளியபடியே புஷ்பகாசி பெயர்பெற்ற கன்னிநாயகி தவம் செய்துகொண்டிருந்தாள். (இச்சரித்திரம் ஸ்காந்தபுராணத்தில் உபரி பாகத்தில் தானவைபோக காண்டத்திலுள்ளது.)

அத்தியாயம் 3

வாணுசுரன் வரலாறு

வாணுசுரன் பழமையான மூன்று லோகங்களையும் அடக்கி ஆண்ட அசுரகுலத்து மன்னன். வாணன் பிரம்மா வினிடம் பல வரங்களைப் பெற்றவன். ஆகாயத்தை முட்டிய தலையும், செவ்வானம் போன்ற தலை ரோமமும், சந்திரன் போன்ற வக்கிர தந்தங்களும், அக்கினி நிற்கும் கண்களும், தீச்செயல்களைச் செய்யும் வலிமையும்,எல்லா உயிர்களையும் வாயிலிட்டுண்டு வயிற்றில் அடக்கும் மகாமேருவையொத்த புயங்களும், நீண்ட கைகளும், யமன்போல முழங்கும் வீரக்கழல்களும், நீலமலை போன்ற கருநிறமும் உடையவன். அவன் பல யுககாலம் அன்ன ஆகாரம் இன்றி பிரம்ம தேவனை நோக்கி கடுந்தவம் புரிந்தான். அந்தவிதம் தவம் செய்வதில் மகிழ்ந்து பகவான் வாணுசுரன் முன் தோன்றி பக்தா நீ இவ்விதம் கடுந்தவம் புரியக் காரணம் என்ன, உனக்கு வேண்டும் வரம் யாது என்று வினவ அசுரகுலத் தரசனுன வாணனும் ஐயனே எனக்கு மனிதர்களாலும், தேவர்களாலும், மற்றும் யாவராலுமே மரணம் கிடைக்கக் கூடாது. ஆனுல் எப்போதுமே பெண் இனத்தையே துச்சமாக நினைக்கும் அசுரகுலத்தரசனுனதால் தன்னை ஒரு பெண் கொல்லக்கூடாது என்ற வரம் கேட்க மறந்து விட்டான். பிரம்மதேவனும் இதைக் கேட்டு அவ்விதமே தந்தோம் என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். வாணனும் வரத்தைப்பெற்று தேவர்களையும், மற்ற அரசர் களையும் வென்று மூன்று லோகங்களையும் அடக்கி ஆண்டு வந்தான். அவ்விதம் வாணுசுரனுல் தோல்வியுற்ற தேவர் கள் பரமசிவனிடம் சென்று பிரம்மாவினுல் வரம்பெற்ற வாணுசுரனுல் நாங்கள் ரெம்பவும் துன்பப்படுகிறோம் என்று வேண்டி வணங்கிநிற்க, லோக ரக்ஷகனுகிய ஈஸ்வரனும் உங்கள் துன்பத்தைத் துடைக்க பூலோகத்தில் தென்பாகத் தில் முக்கடல்கூடும் முனம்பில் புட்பகாசி என்ற (பாற்வதி யின் அம்சமாகிய அன்னை) பெண் தபசு செய்கிருள். அவ

ளால் உங்கள் துன்பம் விரைவில் நீங்கும் என்று அருள் புரிந்தார். தேவர்களும் மகிழ்ந்து அவ்விதமே தென்பாக மாக வந்து ஞானுரண்யம் என்ற வனத்தில் வந்து தாம சிக்கத் தொடங்கினர்.

அத்தியாயம் 4
கன்னிநாயகி பூஞ்சோலை புகுதல்

புஷ்பகாசி சப்தமாதர்களுடன் மேகங்கள் ஆகாயத்தை முட்ட நக்ஷத்திரங்கள் மறையவும், சந்திரன் வெண்ணிறம் படைக்கவும், கொன்றை, முல்லை, மரம் தரைப்பரப்பெல் லாம் பச்சை நிறமடையவும், அதன்மேல் தாமரையும் குவி யும், பனிக்கூட்டம் வெண்போர்வை போர்த்தாற்போல் பூமியெங்கும்மூட, ஆடவரும் பெண்டிரும் பிரியாதிருப்பது போல் முன்பனி, பின்பனி இரண்டு காலமும் வந்து நீங்கின. ஆம்பல், அல்லி, நீலோற்பலம் குவிய; தாமரை விரிய; சூரிய கிரணம் சோலையெல்லாம் செந்தளிர் ஈன்று மலர்ந்து பிகந்த வாசனை வீச; அவ்வாசனையை தென்றல் காற்றெங் கும் கொண்டுபோய்ப் பரப்ப நாயகரும், நாயகிகளும் தடா கத்திலும், சோலையிலும் போயிருக்கும்படி இளவேனிற் காலம் வந்தது. தேவர்களைக் காக்க அபயமருளிய கன்னி நாயகி சப்தகன்னியரை நோக்கி பூஞ்சோலைக்குள் ஓர் ஆசி ரமம் அமைத்து அதனுள்போய் இருப்போம் என்றுசொல்ல அவ்விதம் சென்று தவம்செய்யத் தொடங்கினுள்.

அத்தியாயம் 5
வாணுசுர சங்காரம்

பிரம்மாவினுல், வரம்பெற்று அதனுல் மண்ணுதி மன் னனுன வாணுசுரன் அரசு செலுத்திவரும் காலத்தில் அவ னுடைய வேவுகாரர் துன்முகன், துர்த்தெரிசனன் என்

னும் இருவர் அளவில்லாத மாயம் செய்ய வல்லவர். எவ்விடத்திலும் காணப்படும் அதிசயங்களை வாணனுக்கு தெரிந்து சொல்லும் குணமுடையவர். அவ்விருவரும் பூ மாலையை கையிலேந்தி பூஞ்சோலையில் வீற்றிருந்த கன்னி யைக்கண்டு மின்னே, மோகினியோ என்று ஐயுற்று பெண்ணென்று தெரிந்து இவளை நமது மன்னன் வாணு சுரன் அடைந்தால் தவப்பயன் பெற்றவனுவான் என்று விரைந்து சென்று தன்னைத்தானே நிகர்த்த முன்னின்று வணங்கி அரசே! ஒருநாளும் கண்டு அறியாத அதிசயங் கண்டோம். ரதியோ, ஊர்வசியோ, மஹாலக்ஷிமியின் அவ தாரமோ, மின்என்போமோ, இந்திராணி என்போமோ, அழகுக்கெல்லாம் இருப்பிடமாகிய சொரூபமுள்ள இந்த தேவலோகத்து கன்னியை நீ பெற்றால் உன்னுடைய மாட்சிமை மிகச் சிறப்புற்றேங்கும். மன்மதனை வென்ற பரமசிவனும் அவளைக்கண்டால் அம் மன்மதனுணைக்குள்ப் பட்டு நடப்பான். வீரனே நீ விரைந்து சென்றால் உனக்கே மாலை சூட்டுவாள். அவளை நீ பெற்றால் எந்த இடத்தில் வைத்துக்கொள்வாயோ என்றனர்.

தூதுவர்களுடைய வார்த்தையைக்கேட்டு வாணுசுரன் தன்னை கொல்லவந்த கூற்றுவள் இவள் என்பதை அறியா மல் அவர்களைப்பார்த்து தூதர்களே! பெண் எவ்விடத்தில் இருக்கிறாள் என்று கேட்க தூதர் சொல்லுவர் தென் திசையில் மூன்று சமுத்திரங்கள்கூடும் முனம்பில் குமரி என்ற இடம் இருக்கிறது. அதில் கற்பக பூஞ்சோலையில் சப்த மாதர்கள் சூழ வீற்றிருக்கிறாள் என்றனர். உடனே சேனைகள் சூழத் தேர்கொண்டுவரச்சொல்லி அதில் ஏறிக் கொண்டு சென்றான். தீவினை செலுத்துதலினுலேயே விரைந்து கன்னிநாயகி இருக்கும் பூஞ்சோலையில் வந்து சேர்ந்து அங்குள்ள வளங்களையெல்லாம் கண்டு மகிழ்ந்து சப்த கன்னிகைகள் பாடும் பாடலைக் கேட்டு உலைமெழு கென உருகி தேரையும் சேனையையும் நிறுத்திவிட்டு தனியாய்வந்து கன்னிநாயகியை கண்ணுரக்கண்டு காமத் தீயால் உடல் கருகி மனமுருகி வலியிழந்து பெருமூச்

செறிந்து இந்த அமுதம்போல்வாளை கண்டுவந்துசொன்ன தூதர்களுக்கு கொடுப்பதற்கு மூன்று உலகங்களிலுள்ள பொருளும்போதாது என்று அதிசயித்து நின்ருன்.

என்னுயிர்போல இடைகுறைய நின்ற இவள் ஊர்வசி முதலிய தெய்வப் பெண்ணுமல்லள். பெறுதற்கரிய பேரின்ப வடிவமேயாகும். அவயவங்களின் அழகோ சொல்லுதற்கு முடியாது. சோலையிலுள்ள குயில் வண்டுகள் அன்றில் முழங்கி என்னுயிரை கொல்லுகின்றன. சமுத்திரம் முழங்கி வருத்துகின்றன. கழுகம் பூவும், மகிழம் பூவும், மல்லிகைப் பூவும், தாழம் பூவும் என்னை இறந்துபோம்படி செய்கின்றன. சிவனுலும், விஷ்ணுவினுலும் போக்குதற் கரிய என்னுயிரை மன்மத பாணம் உண்ணுமற் போகாது என்று தென்றற்காற்று முதலியவற்ருல் வருந்தி கன்னி நாயகி நேரே வந்து நின்ருள்.

புட்பகாசி கூந்தலை சிவந்தரேகை விளங்கும்படி நடுவே வகுத்து சூரிய பிறை, சந்திர பிறை அணிந்து தலையிலே கிரீடமும், பொன்னரி மாலைகளும், பூமாலைகளும் அணிந்து இளஞ்சந்திரனை பிளந்துவைத்தாற்போல நெற்றியிலே செந் தூரப்பொட்டிட்டு சூரிய சந்திரர்களென்னுந் தோடுங் காது களிலே புனைந்து, மானைக் காட்டிலும் தாமரை, குவளை, மீனி இவைகளை ஜலத்திலும் புகுத்தி வேல், வாள், அம்பு இவைகளை உறைகளுள் ஒழிப்பசெய்து, கடலை பயங்கொண் டலையச் செய்யும் கண்களுக்கு மையெழுதி குமிழம் பூவை யும் எட் பூவையும் பழித்து விளங்கும் நாசியில் அம்மலர் களென்று வண்டுகள் வீழ்ந்து மிதியாமல் சண்பக மலர் வாசனைபோல சுவாசம் வெளிவரவும் சர்வலோக இகநாயக ராகிய சிவபெருமான் திருமேனியினழகைப் பார்க்கும் கண் ணுடி போலும் கன்னங்கள் கண்ணுகிய வேல்கள் தீட்டு தற்குவைத்த சாணைக்கல்போல விளங்கவும் முருங்கைப் பூ முதலியவையான பொருள்களை நிந்தித்து அமுதத்தைய டைந்துவைத்த தன்மைபோல விளங்கும் செவ்வாயிதழும் முல்லை மலர் முதலியவற்றை சிரித்து பிரகாசிக்கும் பற்க ளும் சந்திரனைக்கண்டு குவியாத் தாமரைபோலும் மலர்ந்த

முகமும் பார்த்து அதன்மேல் சங்கங்களை அயலச்செய்யும் கழுத்திலே பிரகாசிக்கும்படி அணியப்பட்ட ஆபரணங்களை அணிந்து, மின்னலைப்போலுந் திருமேனி பிரகாசிக்க கரங்களில் மாலையேந்தி நின்றுகொண்டிருப்பதை பார்த்த வாணுசுரன்; அன்னமே, அமுதே, கிளியே, மானே, மயிலே, மின்னே, மரகதமணியே, பொன்னே என்னுயிரை இனிக்கும் கனியே, இங்கு நிற்கும் காரணம் என்ன? அநேக காலம் தவம்செய்தாலும் கிடைப்பதற்கரிய உன்னை காண்பதற்கு என்ன தவம் செய்தேனே! என்னை ஆள்வதற்கோ இங்கு வந்து நின்றனை. நீ சொல்லிய ஊழியங்களை செய்வேன். அற்பமாகிய தேவர்களைப்போல் என்னைநினைக்கவேண்டாம். எல்லா செல்வங்களுமுடையேன். யமனும் பயப்படும் வலிமையுள்ளேன். எனக்குப் பயந்து அன்றோ சிவனும் விஷ்ணுவும் மலையிலும், கடலிலும் போய் ஒளிந்திருக்கிறார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரும் ஏவல் கேட்ப அரசு புரிகிறேன். என் பெயர் வாணுசுரன். காமத்தினால் யான் வருந்தலாமோ, மன்மதன் செய்யும் வருத்தத்தை நீக்க வேண்டுமென்று அவயவங்களை வருணித்துச்சொல்லி பின்னும் சொல்லுவான் காம வியாதிக்கு சொல்லப்பட்ட அவஸ்தை பத்திலுள்ள ஒன்பதவஸ்தை வந்து போயின. இனி மரணுவஸ்தை வந்தெய்தும். அதை தடுப்பதற்கு மந்திர தந்திரமும் அரசருதவியும் ரத கஜ துரத பதாதிகளும் ஆயுதங்களும் வேண்டுவனவல்ல. உன்னுடைய கிருபா நோக்கம் சிறிது செய்தால் போதும். திரிலோகங்களையாளும் முதன்மையும் உனக்கே கொடுத்து உன் பாதத்தை வணங்கி உன்னுடைய ஏவல் வழி நிற்பேன். வீணுக தவம்செய்து மேனி எல்லாம் இளைத்தனை. இதனால் என்ன பிரயோஜனம். எவ்வனப் பருவத்தில் அன்றோ இன்பத்தை அனுபவிக்கவேண்டும். நீ எந்தப் பொருளைக் கேட்டாலும் கொண்டுவந்து கொடுக்கிறேன் என்றனன்.

இப்படி சொல்லிய பாதகனுகிய வாணனைப் பார்த்து கன்னிநாயகி கூறுவாள். பின் வருவதறியாத தூண்டின் மீனைப்போல் கெட்டுப்போவதற்கிருக்கின்ற வாணனே!

பெண்கள் கருத்தறியாமல் ஆசைகொள்வது முறையன்று, அவரை தொட நினைத்த தீயவருக்கு ஆயுள் குறையும், மறுமை பயனுமில்லை என்றனள். இவள் நம்மைக் கொல்ல வந்த கூற்றுவள் என்றறியாது கொடியவனாகிய வாணன் பெருமூச்செறிந்து பெண்ணே! உன்னை விவாகம் செய்யாது என்னுயிர் தரியாது. காந்த முறைப்படி யான் முதலில் மணந்து பின்னர் விதிப்படி விவாகம் செய்துகொள்கிறேன் என்றனன். அதுகேட்டு கன்னிநாயகி வாணவனே உனக்கு வேண்டியதை கொண்டுவந்து தருவேன் என்று முன்னமே சொன்னாய். ஆதலால் பாதிரிப் பழமும், அருகம் பழமும், ஆலம் பூவும், அத்திப் பூவும், இத்திப் பூவும், கண்ணில்லாத தேங்காயும், கணுவில்லாத கரும்பும், சந்திர நக்ஷத்திரத்திலுள்ள பிரகாசமும் கொண்டுவந்து கொடுத்தால் நீ சொன்ன காரியம் முடியும் என்றனள். வாணன் மாயா சக்தியால் அவையனைத்தையும் கொண்டுவந்தனன். மாயைக்கெல்லாம் தாயாகிய கன்னிநாயகி முன் அவை நிற்குமோ, பார்க்கும் முன்னமே எல்லாப் பொருள்களும் மறைந்துபோயின. வாணன் தன்னுடைய மாயை பொய்த்துப்போனதறிந்து வெய்த்து புழுங்கி வருந்திநின்று இவளை பயப்படுத்தினால் அன்றி இணங்கமாட்டாள் என்று நினைத்து வாளாயுதத்தை எடுத்து உன்னைக்கொல்லுவேன் என்றுரவாரித்து நின்றான்.

அது கண்ட கன்னிநாயகியும் பகவானைக் குறித்து நோக்கி வருந்த, அவரும் அவளுக்கு வாளாயுதத்தைக் கொடுத்தார். அவளை வாணன் வாளை அசைத்து வெட்டினான். தேவியானவள் அந்த வெட்டு தன்னை தாக்காமல் விலகி அவன் வாளை தன் வாளினால் ஒரே வெட்டாக வெட்டி வீழ்த்தினாள். வாணன் வில்லை வளைத்து பற்பல பாணங்களை பிரயோகம் செய்தான். தேவியும் பகவானின் பிரசாதத்தில் கிடைத்த வில்லை வளைத்து பாணப்பிரயோகம் செய்தாள். இவ்விதமாக பத்து நாள் யுத்தம் செய்தாள். பின்னும் வாணன் பாணப்பிரயோகம்செய்ய தேவியானவள் வில்லை அரசர் பயப்படும்படி குணத்தொனிசெய்து தீப்

பொறி பறக்க பாணப் பிரயோகம் செய்து பொடி, பொடியாக்கி சிதறிவிட்டனள். அசுரர் சேனை கடல் வளைந்து பாணம்,வேல், குந்தம் முதலிய படைகளை தேவி மேலெறிய போருக்கு வாவென்று புயங்களை தட்டி நிற்றலும், தேவி ஒவ்வொரு பாணங்களால் நால்வகை சேனையையும் தொலைத்து வெற்றி சங்கு முழங்கி நின்றாள். அதுகண்ட வாணன் தேர் மேலேறி நெருங்கிவந்து தேவிமீது தேவாஸ்திரங்களை விடுத்தான். அவைகளையும் வாணனுடைய வில், அம்பு, அம்புருத்துணி, தேர், சாரதி, தேர்க் குதிரை அனைத்தும் அக்கினி பாணத்தால் தரையிலே வீழ்த்தி விட்டனள். வாணன் பயந்து மாயையாலே மறைந்துபோக நினைத்தான். அது தெரிந்து சக்கராயுதத்தை வரும்படி வேண்டிநிற்கவும்,அது சூரியனைப்போல் பிரகாசித்து வந்து வாணனுடைய தலையை அறுத்து சமுத்திரத்திலே எறிந்துவிட்டு தேவி பாதத்தை வணங்கி பூமியைக் கிழித்துக் கொண்டு பாதாளம் போய் சேர்ந்தது. அந்த இடத்திலே ஓர் தீர்த்தமுண்டாயிற்று. அதுதான் கோவிலின் வடக்கே ஒரு மைல் தூரத்திலிருக்கும் சக்கர தீர்த்தம் என்று சொல்லப்படுகிறது. வாணனது அறுபட்ட தலை சமுத்திர ஜலம் முழுவதையும் உண்டுவிட்டது. வாணன் சேனையில் இறந்தவருடைய இரத்தம் போய்பெருகி அந்த கருங்கடலை சென்னிற கடலாக்கிவிட்டது.

உடனே தேவர்கள், முனிவர்கள் முதலியோர் ஆடிப் பாடி பற்பல ஆசி கூறி புஷ்பமாரி பொழிந்து தேவியை நோக்கி தாயே! திருமூர்த்திகளாலும் செய்தற்கரிய செய்கையை நீ வந்து செய்து எங்களை இரக்ஷித்தாய் என்று பற்பல தோத்திரஞ்செய்து நிற்க, அவரை தேவி கிருபைக் கண்ணால் பார்த்து நீங்கள் சுகமாக தேவலோகத்துக்கும் அவரவர் இடங்களுக்கும் செல்லுங்கள் என்று விடை கொடுத்தனுப்பிவிட்டு இனி இவ்விடத்தில் இருப்பது சரியல்ல என்று நினைத்து கிழக்கு கடலின் மத்தியில் இருக்கும் பாறையின்மேல் நின்றுகொண்டு தவம் செய்யத் தொடங்கினாள். அதனாலேயே அப்பாறைக்கு ஸ்ரீ பாதப்பாறை

என்ற பெயர் உண்டாயிற்று. இந்த காரணத்தைக் கொண்டே ஸ்வாமி விவேகானந்தரும் அந்த பாறையின் மேல் எழு நாள் தபசு செய்தார். அதனுல் அதற்கு விவே கானந்தா பாறை என்ற பெயரும் உண்டு.

அதுசமயம் பரசுராமரின் தந்தையாகிய ஜமதக்னி முனிவரைக் கார்த்த வீரியார்ச்சுனன் என்ற க்ஷத்திரிய அரசன் கொன்றதால் பரசுராமர் க்ஷத்திரிய பரம்பரையை கொன்று அந்த பாபம் தீருவதற்காக கோகர்ணம் என்னு மிடத்தில் நின்றுகொண்டு தன் கையில் இருக்கும் மழா என்ற ஆயுதத்தை கடலில் விட்டெறிந்தார். அந்த ஆயுத மானது தென் சமுத்திரத்தின் கரையில் கன்னியாகுமரியில் வந்து விழுந்தது. அதுவரையிலும் இருந்த கடலானது விலகி கரையானது. அதை பிராமணர்களுக்கு தானம் செய்துவிட்டு இனி நாம் தானம்செய்த இடத்தில் இருக்க லாகாது என்று நேராக தென் திசையை நோக்கிவந்தார். இங்கு கன்னியாகிய புட்பகாசி பாறையின்மேல் தபசு செய்வதைக் கண்டு தாயே! நான்பொங்கியெழும் சமுத் திரத்தை விலகச்செய்து கரையாக்கி தானம் செய்திருக் கிறேன். இந்தக் கடலானது கரையை திரும்பவும் உண்டு விடாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டி (இப்போது காணும் உட்புறமிருக்கும்) சிறிய கோவிலில் ஒன்று அமைத்து அதில் தாங்கள் வந்து தங்கவேண்டும் என்று அடிபணிந்து நிற்க, அவ்விதமே ஆகுக என்று தேவியும் இங்கு வந்தாள். பரசுராமர் அவளது பாதத்தில் விழுந்து அடிபணிந்து எழுந்து நோக்கும்போது கையில் மாலை யேந்தியுள்ள கன்னி ரூபத்துடன் தெரிசனம் கொடுத்தாள். அதுவே நாம் இப்போது காணும் குமரி அன்னை. இப் போதும் இது பரசுராம க்ஷேத்திரம் என்றும் சொல்லுவர். இப்போதும் நாம் கோவிலுக்கும் ஸ்ரீபாத பாறைக்கும் நடுவில் பாறைகள் பாலம்போல இருந்து இடிந்து விழுந் திருப்பதைக் காணலாம்.

மேலும் இங்கிருந்து ஒன்பதாவது மைலில் இருக்கும் சுசீந்திரம் என்ற ஊரில் ஸ்தாணுமாலையர் பிரம்மச்சாரி

ரூபத்துடன் இருப்பதையும் காணலாம். தேவியின் பாணு சுர சங்காரம் முடிந்து தேவர்களை ஆசீர்வதித்து அந்த ஜோலி முடிவடைந்ததும் பகவானுனவர் தேவியை கலியாணம் செய்துகொள்ள வந்ததாகவும் இதை அறிந்த நாரதர் வழுக்கம்பாறை என்னுமிடத்தில் (இங்கிருந்து 8-வது மைல்) கோழி ரூபத்துடன் நின்று கூவிவிட்டதாகவும், பொழுது விடிந்துவிட்டதாக ஈஸ்வரன் நினைத்து திரும்பிப் போய்விட்டதால் இங்கு கல்யாணத்துக்காக தயார்செய்து காத்துக்கொண்டிருக்கும் தேவியானவள் ஈஸ்வரன் வராததால் கோபங்கொண்டு தான் சேகரித்து வைத்திருக்கும் சாமான்களை கல் ரூபமாகும்படி சபித்தாள் என்றும் சொல்வதுண்டு. அவைகளே இப்போது நாம் சமுத்திரக்கரையில் காணும் அரிசி மணல், குங்குமம்போல நிறத்தில் சிவந்த மணல், சாந்து மாதிரியுள்ள கறுப்பு மணலுமாகும். மேலும் கோவிலுக்குள் பாலசௌந்தரி அம்மனின் பக்கத்தில் காணும் கல்வாற்பையும் காணலாம். அது காரணம்கொண்டே இங்கு அம்பாளை தெரிசனம் செய்ய வருவோர் சுசீந்திரத்துக்கும் செல்வதுண்டு.

அத்தியாயம் 6

கன்னியாகுமரித் தீர்த்தச் சுருக்கம்

எவ்விடத்திலுமுள்ள தீர்த்தங்களுக்கு மேலாகிய கன்னியாகுமரித் தலத்தில் தேவி சன்னதி முன்னும் அதன் வடக்கும் தெற்குமுள்ள தீர்த்தங்கள் தம்மிடத்தில் முழுகினோர் நினைத்தவைகளைக் கொடுத்தருளும் சர்க்கர தீர்த்தம் பாவநாசம், காயத்திரி, சாவித்திரி, சரசோதி, கன்னியாகுமரி கணேச தீர்த்தம், தாணு தீர்த்தம், வீம தீர்த்தம், பிதிர் தீர்த்தம், மாதரு தீர்த்தம் ஆகிய பதினெரு தீர்த்தங்கள் சமுத்திரக்கரை கண்ணேயுள்ளனவாம். கன்னிநாயகி வாணுசுரனைக் கொன்ற காலத்திலே தேவர், முனிவர், சித்தர், மருத்துவர், வசுக்கர், சப்த மாதர்கள், விசுவ

தேவர், பிதிர்கள் எல்லோரும் தேவியைத் தோத்திரம் செய்ய உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள் என்று தேவி அருளுதலும், தாயே நீ இந்த கன்னியா குமரித் தலத்திலிருந்து அடியார்க்கருள் செய்யவேண்டும். அன்றியும் எங்களுடைய பேராலே இந்தத் தலத்திலே தீர்த்தங்களுண்டாகவேண்டும்.தேவர் முதலானோர் கேட்கத் தேவி அவ்வாறு வரம் தந்து பிதிர்களை நோக்கி உங்கள் தீர்த்தத்திலே யாவராயினும் மூழ்கித் தானம் கொடுத்துப் பிண்டமிட்டுத் தர்ப்பணம் சிராத்தம் செய்வாரானாலும், தங்கள் பிதிர்களை உத்தேசித்து ஏழு தரம் மூழ்கினாலும், அவர் குலத்துள்ளோர் எல்லோரும் சொற்க பதவியில் சென்று கற்பகாலமிருப்பர். பிதிர் தினத்தில் மாதந் தோறும் ஒரு வருடம் மூழ்கினவர் மோக்ஷ உலக மடைந்திருப்பார் என்று பெரிய வரமும் கொடுத்தரு ளினர். இம்மட்டோ, பிதிர் சாபமும் வேறு சாபமும் பாவங்களும் அத்தீர்த்தத்திலே மூழ்கினோருக்கு நீங்கும். இட்ட சித்தியெய்தும் தமது குலம் விருத்தியடையும். பாவிகளந்த தீர்த்தத்தையடையமாட்டார்கள். புண்ணியர் களேயடைவார்கள்.

பிரமாணி, மயேசுரி, கவுமாரி, வீரி, வராகி, இந்தி ராணி,சாமுண்டியாகியசப்தமாதரும்,தங்கள் தங்கள் பெய ராலே பிதிர் தீர்த்தத்தின் பக்கமே தீர்த்தங்கள் செய்து அதிலே மூழ்கினவன் பாவீயானாலும்,பாவந்தீர்ந்து மோக்ஷ மடைவான். மனத்திலே நினைத்தவையெல்லாம் பெறுவா னென்று வரங்கொடுத்தனர்.ஆதலால் எல்லோரும் அந்தத் தீர்த்தத்திலே தீர்த்தமாடவேண்டும். சமுத்திரக் கரையிலே யுள்ள பாவநாசமென்னும் தீர்த்தம் உலகமெல்லாம் புகழப் பட்டது. இந்திரன் கௌதம முனிவரிட்ட சாபம் தீர்க்கும் பொருட்டு கன்னியாகுமரித் தலத்திலே தேவியை நோக்கி வந்து வட பக்கத்திலேயுள்ள ஒரு தீர்த்தத்திலே தினந் தோறும் திரிகாலமும் தீர்த்தமாடி பக்திசெய்து தேவியைப் பூசித்துத் தவஞ்செய்திருந்தனன். கன்னிநாயகி இந்திரன் முன்னெழுந்தருளி இந்திரனே உன்னுடைய தவத்தையும்

பூசனையையும் மகிழ்ந்தேன்!உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்க என்றனர். எல்லா உலகமும் வேதங்களும் துதிக்கும் தேவநாயகியே!உன்னை தரிசிக்கப்பெற்ற பேற்றைப் பார்க்கிலும் அடியேன் பெறுவது யாதிருக்கின்றது என்று இந்திரன் தேவியை தோத்திரஞ்செய்து கௌதம முனிவர் கொடுத்த சாபத்தை நீக்கியருளவேண்டும் எனப் பிரார்த்தித்தனன். அவனை நோக்கி தேவி திருவருள் சுரந்து முனிவன் சாபத்தாலுண்டாகிய குறிகளெல்லாம் கண்களாகும்படி வரம் தந்தேன், சுகமாக வாழ்வாய். உன்னுடைய பாவமெல்லாம் தீர்த்தம் போக்கியபடியால் இது பாவநாசமெனப் பெயர்பெறக்கடவது. இதில் கொடிய பாவிகள் மூழ்கவேண்டுமென்பது நினைத்தாலும் பாவங்களெல்லாம் நீங்கிப் பரிசுத்தராகிச் சொர்க்க பதவியடைவர்.

இனி சாவித்திரி, காயத்திரி, சரஸ்வதி என்னும் மூன்று தீர்த்தங்களின் மான்மியம் என்னவென்றால்: கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் நதிகள் மூன்றிலும் உலகத்தாரனைவரும் வந்து, வந்து மூழ்கிப் பாவங்களை விடுத்தலால் அந்த நதிகள் குற்றமெய்தி இந்தப் பாவத்தை எங்குபோய்த் தொலைப்போமென்று ஆலோசித்து கன்னிநாயகி வீற்றிருக்கும் குமரித் தலத்தில் வந்து கங்கை சாவித்திரியாகவும், யமுனை காயத்திரியாகவும், சரஸ்வதி சரஸ்வதியாகவும் நாமங்கொண்டு கன்னி தீர்த்தத்தின் வட திசையிலே தீர்த்த வடிவமாகி ஆயிர வருடம் தவஞ் செய்திருத்தலும், அது கண்டு கன்னிநாயகி திருவருள் சுரந்து தீர்த்தங்களின் முன்னெழுந்து நின்று உங்களுக்கு வேண்டும் வரம் கேட்க என்றருளிச்செய்தனள். உடனே அத்தீர்த்தங்கள் வணங்கிஇவ்வுலகத்தாரெல்லோரும்வந்து மூழ்கலால் அவர்கள் பாவங்களெல்லாமடையப்பெற்றனம். அவைகள் நீங்கும்பொருட்டு கருணைசெய்யவேண்டுமென்றன. தேவி அந்தப்படியே திருவருள் புரிந்து நீங்கள் உங்கள் பெயராலே செய்த தீர்த்தங்களிலே எப்போதுமிருத்தல்வேண்டும். அத்தீர்த்தங்களிலே வந்து மூழ்கினல் பாவம் முழுவதும் நீக்கிப் பரிசுத்தராகி நினைத்த

காரியங்களெல்லாமடையும் வரம் தந்தேன் என்று சொல்லித் தன் இருப்பிடத்திற்குச் சென்றனள்.

இனி வீம தீர்த்தத்தின் மான்மியமாவது: குருகுலத்தரசனுகிய துரியோதனுதியரும் தருமனுதியரும் சகுனி என்பவன் வஞ்சனையாற் சூதாடல்செய்து நாட்டை இழந்து தருமனுதியர் காட்டுக்குப் போய் வாசம் செய்திருக்கும் போது தருமராஜனை நோக்கி வீமன் சூதாடிய உன் கை நெருப்புப் பற்ருதோ என்று நிந்தனைசெய்தனன். அதனுல் தரித்திரமடைந்து மதிமயங்கி யாதொரு செயலுமற்றுத் துன்புற்று வீமனிருப்பதைத் தரும ராஜனறிந்து தனது பழைய ஆச்சாரியரான தவுமிய முனிவரை அழைத்து வீமனுற்ற துன்பத்தைச் சொல்லியது தீருவதற்குப் பிராயச்சித்தம் யாது என்று கேட்டு அவரது ஆக்ஞையின்படி கன்னியாகுமரியின்கண் வந்து தேவித் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து தம்பியாகிய வீமனையும் ஸ்நானஞ் செய்வித்த உடனே வீமன் சகல பாவமும் தீர்ந்து முன்போல அறிவுடையவனுயினன். பின்னிருவரும் தேவி திருவடித் தாமரையை வணங்கித் திருவருள் பெற்று மகிழ்ச்சியடைந்து வந்து வனவாசம் நீங்கிச் சென்றனர். அன்று தொட்டுத் தேவித் தீர்த்தம், வீம தீர்த்தம் என்னும் பெயரைப்பெற்றது.

இனி கன்னி தீர்த்த மான்மியம் என்னவெனில்: அந்த தீர்த்தம் தேவி சன்னிதியிலுள்ளது. எல்லாத் தீர்த்த மேன்மையினும், அதிக மேன்மையுடையது. திரிலோகத்திலுமுள்ள தீர்த்தங்களெல்லாமித் தீர்த்தத்திலே வந்திருக்கும் புத்திரனை, பூமியை, பொருளை, கல்வியை, மோக்ஷத்தை இன்னும் விரும்பியவற்றை இந்த தீர்த்தம் தன்னிடத்தில் வந்து மூழ்கினேருக்குக் கொடுத்தருளும். எல்லாத் தீர்த்தத்தினுமுயர்ந்த கங்கை முதலிய மூன்று தீர்த்தங்களுமித் தீர்த்தத்தி லோடுமென்ரு லிதுபோலச் சிறந்த தீர்த்தமில்லையென்று சொல்லவும் வேண்டுமோ! அறிந்துமறியாமலுஞ் செய்த பாவங்கள் எவ்வளவானுலு மிதிலே மூழ்குவார்க்குச் சூரியன் முன்னே தீர்ந்த பனி

போல் நீங்கிவிடும். வேதங்களாலும் சொல்வதற்கரிய இந்த தீர்த்த மான்மியமெடுத்துச் சொல்ல வல்லவர் யார்? இனி தாணு தீர்த்த மான்மியம் யாதெனில்: கந்த புராணத்தில் சொல்லப்பட்ட சுசீந்திரமென்னும் க்ஷேத்திரத்திலே தாணு நாயகர் திருமுடியிலே யபிடேகஞ் செய்வித்த பற்பல அபிடேக தீர்த்தம் தாணு நாயகர் சடையிலுள்ள கங்கா நதியுடன் சேர்ந்தே ஒன்றுகி கீழே வந்து பாதலவாகினியாய் சென்று கன்னியாகுமரித் தலத்திலுள்ள வீம தீர்த்த துறைக்கு மேல்பக்கமுள்ள கடலுள்ளிருக்கும் சக்கர மலையின் பக்கமே சேரும். அதிலே கன்னிநாயகித் தீர்த்த மாடுவாளென்று லதின் பெருமை சொல்லமுடியுமோ? சென்ற பிறப்பிலு மிறப்பிலுஞ் செய்த பாவங்களைப் போக்கி மோக்ஷமடைய விரும்பி தவஞ்செய்பவர் இந்தத் தீர்த்தத்திலே மூழ்குவர்.முனிவர்க ளெப்போது மிதிலே ஸ்நானஞ் செய்வர். இகபர லாபமடைய விரும்பினவருக்கு இத்தீர்த்தமே சாதனமாயுள்ளது. அகத்தியர் முதலிய ரிஷிகளும் இதிலே தோய்வாரென்றல் இதன் பெருமை யாராலே சொல்லமுடியும்,

இனி கணேச தீர்த்த மான்மியம் என்னவெனில்:விஷ்ணு அம்சமாகிய பரசுராமன் க்ஷத்திரியரனைவரையும் வென்று யாகஞ்செய்து இந்தப் பூமியைத் தானங்கொடுத்தனன். பின்னர் தானங்கொடுத்த பூமியிலே தானிருக்கலாகாது என்று வருணனை நோக்கி தவஞ்செய்து உனக்குரிமை யாகிய கடலிடத்திலே என் மழுவாயுதத்தை எறிவேன். அது வீழ்ந்த இடத்துக்கப்புறம் கடல் நீர் போய்விடவேண்டும். நீர் வற்றிய இடத்தை எனக்குக் கொடுக்கவேண்டுமென்று வரம்பெற்று அவ்வாறே செய்து ஒரு யோசனை தூரமுள்ள இடத்தைக் கைக்கொண்டனன். அதன்மேல் கன்னியாகுமரி கடற்கரையிலே விநாயகரை பிரதிஷ்டை செய்து பூஜித்து சுவாமி! இந்தக் கடற்கரையைக் கடவாதிருக்கவேண்டும். தேவரீரிங்கெப்போதும் எழுந்தருளியிருந்த உம்முடைய சன்னதிக்கு நேரே சமுத்திரத்திலே மூழ்கினேருக்கு இட்ட சித்திகளையருளி முக்தியுங்கொடுத்

தருளல் வேண்டுமென்று வரம்பெற்றனன். சன்னிதி முன்னுள்ள கடலே கணேச தீர்த்தமாம். அதிலே எல்லோரும் தீர்த்தமாடி விநாயகருக்கு பழம் முதலாகிய சிற்றுண்டிகள் படைத்து ஆராதனை செய்வர். மான்மியஞ் சொல்ல முடியாது.

இனி சக்கிர தீர்த்த மான்மியமாவது: கன்னிநாயகி வாணுசுரனது தலையை அறுக்கப் பிலத்தினின்று வர வழைத்த சக்கிராயுதம் வந்த இடத்தைச் சக்கிர தீர்த்த மாகச் செய்தனள். இதிலே வந்து மூழ்கும் தேவரையும் மனிதரையும் அளக்கமுடியாது. இவ்விரு நிறத்தாரையும் வணங்கினோருஞ் சுவர்க்க பதவி அடைவதென்றால் அதன் பெருமை சொல்லுந்தரமுடையதோ.

சக்கிர தீர்த்தமாடவேண்டில் அத்தீர்த்தம் கண்ணுக்குத் தெரியாத் தூரத்திலே சென்று மலமோசனஞ் செய்வித்துச் சுத்திசெய்து வந்து தீர்த்தத்தை வணங்கி உள்ளே புகுந்து எச்சிலுமியாது ஸ்நானஞ்செய்து வஸ்திரத்தை வெளியேறி வந்து பிழிந்து தோய்த்துலர்ந்த வஸ்திரத்தா லீரம் புலர்த்திக் காதந்த இரண்டு வஸ்திரம் தரித்து நித்தியகர்மமுடித்துக் குமரக் கடவுளைத் தரிசிக்கவேண்டும். அப்பாற் பாவாரசத் தீர்த்தத்திலே மூழ்கிச் சமுத்திர ஸ்நானஞ்செய்யப் போகும்போது சாவித்திரி முதலிய மூன்று தீர்த்தத்திலும் மூழ்கி அதன்மேல் வேதியராலே தரிப்பித்து பவித்திரத்தோடு சங்கற்பஞ்செய்து வேண்டிய வைகளை மனத்திலே நினைத்து அன்போடு விதிப்படி வணங்கி சமுத்திர ஸ்நானம் செய்து மீண்டும் மேற் சொன்ன மூன்று தீர்த்தங்களிலும் மூழ்குதல் வேண்டும். அப்பாற் சங்கற்பஞ்செய்து தேவியைத் தரிசித்து விதிப்படி சன்னதியிலுள்ள தேவி தீர்த்தமாடவேண்டும். விநாயக தீர்த்தமாடுவோர் விநாயகரை முன்னர் வணங்கிப் பக்தி யுடனே தியானித்து இடையூறு வராமல் காத்தருளுக. அடியேன் பிழைத்தல் வேண்டும் எனப் பிரார்த்தித்து சமுத்திர ஸ்நானஞ்செய்யவேண்டும். தாணு தீர்த்தமாகிய கடலைச் சார்ந்து கும்பிட்டுத் தாணுவாகிய சிவபிரானை

நினைத்து வேண்டியவற்றையருளுக என்று மூழ்கல் வேண்டும். வீம தீர்த்தம், பிதிர் தீர்த்தம், மாதா தீர்த்தமாகிய மூன்றிலும் இந்த விதிப்படி மூழ்கல் வேண்டும்.

அதன்மேல் கருப்பணம், பிண்டம், சிராத்த முதலிய யவை செய்து முடிவிலே தேவி பாத தாமரையை வணங்கினவர் பாவங்களைப் போக்கிப் பரிசுத்தராவர். சக்கரகிரியிடத்துவரும் தாணு தீர்த்தத்திலே மூழ்கினவர் சுசீந்திரத்துக்குப் போய் மும்மூர்த்திகளுமொன்ருகிய தாணுமாலயனை வணங்கல் வேண்டும்.

மேற்கூறினவற்றையெல்லாம் கன்னியாகுமரித் தலத்தின் விசேடத்தைச் சொல்லும்படியாக கேட்ட கார்த்தவீரியார்ச்சுன அரசனுக்கு தத்தாத்திரிய முனிவர் கூறி மேலும் அரசனை நோக்கி, அரசே கன்னியாகுமரித் தலத்தின் மூன்று விசேஷமும் யான் சொல்லக்கேட்டாயுன்னிலுமுயர்ந்த மன்னர் யார் இருக்கின்றனர் என்று தத்தாத்திரிய முனிவர் கூறுதலும்,அம்முனிவரை அரசன் வணங்கி பொன்னுற் செய்த புதிய ஆசனத்திலேற்றி யபிடேகமும் அருக்கிய முதலிய உபசாரமுஞ் செய்வித்துப்பிராமணருக்கெல்லாம் வேண்டிய தானங்களுங் கொடுத்து வணங்கி நின்றனன். முனிவர் அரசனுக்கு ஆசி கூறித் தமதிருப்பிடஞ்சென்றனன். அரசனும் கன்னியாகுமரித் தல புராண மான்மியம் கேட்டதினுல் சகல சித்திகளும்பெற்று வாழ்ந்திருந்தார்களென்று சூத முனிவர் சவுனகாதி முனிவருக்குச்சொல்லிப் பின்னுஞ்சொல்லுவார். கன்னி நாயகி வீற்றிருக்குங் கன்னியாகுமரித் தலபுராணங் கேட்க வேண்டுமானுல் விஷ்ணுவாலயத்திலேனும், சிவாலயத்திலேனும்,பிறஆலயங்களிலேனும்கேட்கவேண்டும். திரவியம் மக்கள், ஐசுவரியம், கல்வி, மோக்ஷம் இவைகள் விரும்பினேர்கள் பக்தியுடன் கேட்டவர்களாயின் அவர்களுக்கு உடனே சித்திக்கும். இந்தப் புராணத்தைப் படிப்பவர், இதற்குப் பொருள் சொல்பவர், இதைக் கேட்பவர், எழுதுவோர் பொருள் கொடுத்து எழுதுவிப்போர் அக்கினிட்டோமஞ் செய்த பலனை அடைவாரானுல் யான்

சொல்லதேதிருக்கின்றது என்றனர். அது கேட்டு சவுன காதியர் மனமகிழ்ந்து சொல்லுவார். இப்புராணங்கேட்டு உம்மாலே அளவிலாத மான்மியமடைந்தோம். பூருவப் புண்ணியஞ்செய்தோமென்று தெரிந்தனன் என்று பலவாரு கவும் உபசாரஞ் சொல்லினர். அவருக்கு சூத முனிவரும் ஆசி சொல்லி தமதாசிரியராகிய வியாச முனீவரிடத்துக் குச் சென்றனர்.

மாத மூன்று மழை பொழிக, பசுக்கள் வாழ்க, பிரஜைகள் வாழ்க, அரசன் செங்கோல் வாழ்க, கற்புடைய பெண்கள் வாழ்க, சிவாலயம் வாழ்க, விஷ்ணுவாலயம் வாழ்க, கன்னியாகுமரி வாழ்க, கன்னிநாயகி ஆலயம் வாழ்க.

இவ்விடத்தில் தேவி குமரியாகவும், சுசீந்திரத்தில் பகவான் பிரம்மச்சாரியாகவும், மதுரையில் பகவானும் அம் பாளும் கல்யாண கோலத்திலும் இருப்பதால்தான் இங்கு வரும் யாத்திரீகர்கள் இம்மூன்று ஸ்தலங்களுக்கும் தவருது செல்வார்கள்.

சுசீந்திர ஸ்தல புராணச் சுருக்கம்.

ஞானரண்யம் என்ற வனத்தில் அத்திரி மஹரிஷியும் அவருடைய தர்ம பத்தினி அனுசூயா தேவியுடன் மும்மூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர் மூன்று பேர்களுடையவும் ஏகோபித்த தரிசனம் கிடைப்பதற்காக தபஸ் செய்துகொண்டிருந்தனர். (அவர்கள் ஆசிரமம் கட்டி தாமதித்த இடம்தான் இன்று ஆசிராமம் என்ற பெயருடன் இருக்கிறது.) இதை அறிந்த நாரதர் நேராக சொர்க்க லோகம் சென்று மும்மூர்த்திகளிடமும், பூலோகத்தில் அனுசூயா என்னும் பதிவிருதாசிரோண்மணி இருக்கிருள். அவள் நினைத்த காரியத்தை முடிக்க வல்லவள் என்று அவளைப் பற்றியும் பதிவிருதா தர்மத்தை கடைப்பிடித்து ஒழுகிவருவதையும் சிறப்பாக எடுத்துச் சொன்னுர். அதைக் கேட்ட மும்மூர்த்திகளும் அவளை பரீக்ஷிக்க நினைத்து நேராக பூலோகம் வந்து சன்னியாசி ரூபத்துடன் அனுசூயா தேவியிடம் பிக்ஷை கேட்டனர். அப்போது அத்திரி மஹரிஷியானவர் ஹோமம் நடத்துவதற்கு வேண்டிய சாமக்கிரியைகள் தயாரிப்பதற்காகவும் ரிஷீஸ்வரர்களை அழைப்பதற்காகவும் வெளியில் சென்றிருந்தார். அனுசூயா தேவி எப்போதும் தன் பர்த்தா வெளியில் போகும்போது அவருடைய பாதத்தை அபிஷேகம் செய்து பூஜித்து அந்த தீர்த்தத்தை சூக்ஷிச்சு பூஜைசெய்து வருவது வழக்கம். மும்மூர்த்திகளாகிய சன்னியாசிகள் குளித்து அமுதுண்ண வந்ததும் தேவியானவள் இலையிட்டு அமுது படைக்க ஆரம்பித்தாள். அப்போது முனிவர்கள் தாயே எங்களுக்கு நிர்மாணமாக அமுது படைக்கவும் என்று சொல்ல அனுசூயா ஆச்சரியப்பட்டு செய்வதறியாமல் தன் பர்த்தாவின் பாத தீர்த்தத்தை முனிவர்கள்மேல் தெளிக்க மூவரும் மூன்று குழந்தைகளாக மாறினர். அப்போது தேவியானவள் அவர்கள் கேட்ட பிரகாரம் நிர்மாணத்துடனேயே பால் கொடுத்து தொட்டிலிலிட்டு தாராட்ட இந்த வேடிக்கையை அறிந்த நாரதர் மும்மூர்த்திகளின்

பத்தினிமாரிடம் சென்று முறையிட்டார். அவர்களும் நேராக இந்த இடத்துக்கு வந்து அனுசூயா தேவியினிடம் மாங்கல்ய பிக்ஷை கேட்க தேவியும் தன் பர்த்தாவின் பாத தீர்த்தத்தை குழந்தைகள்மேல் தெளிக்க அவர்களும் சுய உருப்பெற்று நின்றனர். அப்போது வெளியே சென்றிருந்த அத்திரி மஹரிஷியும் வரவே நாரதரும் வந்தார். அத்திரி ரிஷிக்கும் அனுசூயா தேவிக்கும் தாங்கள் முன் சொல்லியிருந்த பிரகாரம் தெரிசனம் கொடுக்கவே தான் இவ்வளவும் செய்ததாக நாரதர் சொல்ல அவ்விதமே மூவரும் ஓருருவாக தெரிசனம் கொடுத்தருளினார்கள். அவ்விடமே கோவிலுக்குள் வெளிபிரகாரத்தில் இருக்கும் கொன்னையடி என்ற சன்னதி. கொன்றை மரத்திலே அவர்களுடைய பிரதிஷ்டை இருக்கிறதினால் இந்த பெயர் வழங்கலாயிற்று. பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரர் மூவரும் ஒன்றுக இருப்பதால் தாணுமாலையன் என்ற பெயரும் ஸ்வாமிக்கு உண்டு.

இது இங்ஙனமிருக்க, கௌதம ரிஷியின் மனைவி அகல்யாமேல் ஆசைகொண்ட தேவேந்திரன் அகல்யாவை கற்பழித்த குற்றத்திற்காக கௌதமரால் தேகம் பூராவும் யோனியாகக் கடவாய் என்ற சாபம் பெற்றுன். அச் சாபம் தீர மும்மூர்த்திகளை ஒரே காலத்தில் பார்த்தால் சாபம் நீங்கும் என்ற பிரதி வரமும் உண்டு. அவ்விதம் மும்மூர்த்திகள் ஞானரண்யம் என்ற வனத்தில் இருப்பதை அறிந்து நேராக இங்கே வந்து தன் வாகனமாகிய ஐராவதம் என்ற யானையைக் கொண்டு ஒரு நதீ வெட்டச் செய்தான். அந்நதியில் குளித்து இம்மூர்த்திகளை தெரிசனம்செய்து பூஜித்ததால் அவன் தேகம் பூராவும் யோனியாக இருந்தது கண்களாக மாறி சுசியானது. அவ்விதம் இந்திரனுடைய சாபம் நிவிர்த்தியாகி சுசி ஆனதால் சுசி இந்திரம் என்ற பெயருண்டாயிற்று. அது நாளடைவில் சுசீந்திரம் என்று வழங்கலாயிற்று.

அங்குள்ள மூல ஸ்தானங்களில் உள்ள சிவலிங்கம் தேவேந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும்,

இரவு 8 மணிக்குமேல் அர்த்த ஜாம பூஜை தேவேந்திரனே செய்வதால் இன்றும்அங்கு அர்த்தஜாம பூஜை கிடையாது. இங்கு ஒரு சன்னதியில் பூஜைசெய்தவர் மறு நாள் வேறே சன்னதிக்கு மாறவேண்டும். கோவில் சன்னதிக்குள் போகும்போது அகம் கண்டது புறம் சொல்லேன் என்ற சத்தியத்தோடு உள் செல்லவேண்டும் என்ற ஆகமமும் உண்டு. இங்கு சீவலி பிரகாரத்தில் பெரிய மாவினுல் உள்ள ரிஷபமும், கெருடனும் வல்லப கணபதி, கைலாசம், ஹரிஹரர், ராமர், பஞ்சபாண்டவர்கள் பிரதிஷ்டைசெய்த கோவில்கள் முருகன் சன்னதி, ஆஞ்சநேயரின் விஸ்வரூப தெரிசனம், சங்கீத கல் தூண்கள் முதலிய தெரிசனமும் உண்டு. அங்கு பெரிய கோபுரமும், தெப்பக்குளமும் உண்டு. கன்னியாகுமரிக்கு வருபவர்கள் சுசீந்திரத்திலும் தெரிசனம் செய்துவிட்டே செல்வார்கள். கல் தூண்களில் நல்ல நல்ல வேலைப்பாடுகளும் காணலாம்.

சுசீந்திர ஸ்தல மகிமைச் சுருக்கம் முற்றிற்று.

விஜயஞ்செய்யுங்கள்

ஆனந்த பவான்

ாமணாள் காப்பி சாப்பாடு

ஹோட்டல்,

சன்னதித் தெரு,

கன்னியாகுமரி.

ன் ஆர்டரின்படி சாப்பாடு, காப்பி
தயார்செய்து கொடுக்கப்படும்.

அம்மனின் வெள்ளிப் படமும்,
ன்று கலர் பிரிண்ட் படமும்
கிடைக்கும்.

பலக்ஷிமி ஸ்டோர்ஸ்

கன்னியாகுமரி.

கொட்டாரம்
ராஜா அச்சகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.